| தொடர் இல. | வங்கியின் பெயர் | கணக்கு இலக்கம் | 2024.12.31 ஆம் திகதியன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி | 2024.12.31 ஆம் திகதியன்று காசேட்டின் பிரகாரம் மீதி | 2024.12.31ஆம் திகதிக்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தக் காசோலைகள் (6 மாதங்களுக்கு மேலாக இருப்பின்) | இறுதியாக வங்கி சரிசெய்தல் தயாரிக்கப்பட்டுள்ள மாதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபா.) | (ரூபா.) | | |
| 1 | இலங்கை வங்கி, ஹைட்பாக் | 7C41207 | 2,726,160 | 0.00 | இல்லை | 2024 டிசம்பர் |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

......................................

எஸ்.எல்.எம்.நிப்ராஸ்
கணக்காளர்
திகதி : 2025.02.19

S.L.M. Nibras
Accountant (Acting)
Department of Christian Religious Affairs

### 3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை - (பொருத்தமன்று)

| வருமானக் குறியீடு | வருமானக் குறியிட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | அளவு (ரூ.) | இறுதி வருமான மதிப்பீடு % ல் |
| - | - | - | - | - | - |

### 3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | | |
| மீண்டெழும் | 186,000,000 | 190,539,900 | 148,118,780.49 | 78% |
| மூலதனம் | 24,000,000 | 24,000,000 | 20,589,783.04 | 86% |

### 3.7. நி.பி.208 ன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களத்திற்கான ஒதுக்கீடு

| தொடர் இலக்கம் | அமைச்சு /திணைக்கள ங்களிலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆகஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 1. | - | - | - | | - | - |

### 3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2024 ஆம் திகதியன்றில் சுற்றாய்வுச் சபை அறிக்கையின்படி மீதி | 31.12.2024 ஆம் திகதியில் நிதி நிலைமை அறிக்கைக்கமைய மீதி | எதிர்காலத்தில் கணக்கிடவேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 1,398,800 | 1,398,800 | — | — |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 28,983,979.93 | 28,983,979.93 | — | — |
| 9153 | காணி | — | — | — | — |
| 9154 | கட்புலனாகா சொத்துக்கள் | — | — | — | — |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | — | — | — | — |
| 9160 | நடைபெறும் பணிகள் | — | — | — | — |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | — | — | — | — |

## 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

பணிப்பாளர்

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்.

<u>தலைப்பு 203 –கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் 2024ஆண்டு டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகள் தொடர்பாக 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பந்தியின் பிரகாரம் கணக்காய்வு தலைமை அதிபதியின் சாராம்ச அறிக்கை</u>

1. <u>நிதிக் கூற்றுக்கள்</u>

   1.1 <u>கருத்து</u>

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆந் திகதியில் நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று, அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகை கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்றுகளில் அமைந்த 2024 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று என்பன, 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைந்து வாசிக்கப்படக்கூடிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) யாப்பில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பந்தியின் பிரகாரம் <u>கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்திற்கு</u> சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக் கூற்று தொடர்பான எனது கருத்து வெளிப்பாடு மற்றும் அவதானிப்புகள் என்பன இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பந்திக்கமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்தம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6)ஆம் யாப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேுசிய கணக்காய்வு சட்டத்தின் 10ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கையானது எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2024 டிசம்பர் 31ஆந் திகதியில் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமைகள் மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கமைய உண்மையானதும் நியாயமான நிலைமையையும் எடுத்துக் காட்டுகின்றன என்பது எனது கருத்தாகும்.

   1.2 <u>கருத்திற்கான அடிப்படை</u>

   இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைய நான் கணக்காய்வை மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது பொறுப்புக்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொறுப்புக்கள் என்ற பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனது கருத்துக்கு அடிப்படையொன்றை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரங்கள் போதுமானதும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.3 **விடயமொன்றைக் கருத்திற் கொள்ளுதல் - நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதன் அடிப்படை**

இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் அடிப்படை விளக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. நிதிக் கூற்றுக்கள் அரச நிதிப் பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21ஆந் திகதியில் திருத்தப்பட்ட 2024 டிசம்பர் 16ஆந் திதிகிய அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 06/2024இன் அடிப்படையில் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின், திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் அவசியத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நிதிக்கூற்றுக்கள் பிற நோக்கங்களுக்குப் பொருத்தமுள்ளதாக இருக்க முடியாது. எனது அறிக்கையானது கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்கு மட்டும் என நோக்கமாகக் கொண்டது. இந்த விடயம் தொடர்பில் எனது கருத்தானது மாற்றியமைக்கப்படமாட்டாது.

1.4 **நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோதக்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கமைய, உண்மையானதும் நியாயமான நிலைமைகளை எடுத்துக் காட்டும் விதத்தில் 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பந்தியின ஏற்பாடுகளுக்கமைய நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுரீதியான பிழையான கருத்துக்களற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களம் வருடாந்தம் மற்றும் காலத்திற்கேற்ற நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தமது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய விதத்தில் பதிவேடுகளையும் அறிக்கைகளையும் பேணிச் செல்லுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பந்தியின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு வினைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அக்கட்டமைப்பின் வினைத்திறன் தொடர்பில் காலத்திற்குக் காலம் மீளாய்வொன்றை மேற்கொண்டு அதனடிப்படையில் கட்டமைப்பை வினைத்திறனான வகையில் மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.5 **நிதிக் கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரது பொறுப்புக்கள்**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுரீதியான பிழையான, கருத்துக்களற்ற நியாயமான உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது கருத்துக்களை உள்ளடக்கிய கணக்காய்வு சாராம்ச அறிக்கையை வழங்குதல் எனது நோக்கமாகும். நியாயத்தை உறுதிப்படுத்துதல் என்பது உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக காணப்படும் எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய

கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் அளவு ரீதியான குறைபாடுகளற்றது என உறுதிப்படுத்தப்படுவது அன்று. ஊழல் மற்றும் தவறுகள் தனித்த அல்லது கூட்டான அழுத்தத்தினால் அளவுரீதியான தவறுகள் ஏற்படக்கூடுமாகையால், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துனர்கள் பொருளாதார ரீதியில் தீர்மானங்களை எடுக்கும்போது அது தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின்போது தொழில் நீதியாகவும் நேர்மையாகவும் கணக்காய்வு செய்யப்பட்டது.

- ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுரீதியான பிழையான நிதிக் கூற்றுக்களது ஆபத்துக்களை அறிந்து கொள்ளும்போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ப கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு ஊழல்கள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான ஆதாரங்களைப் பெற்றுக் கொள்ளுதல் எனது கருத்திற்கு அடிப்படையாகும். அளவுரீதியான தவறான கூற்றுக்களால் ஏற்படும் தாக்கத்தை விட மோசடிகளால் ஏற்படுகின்ற தாக்கம் அதிகம் என்பதால், பிழையான தொடர்புகள், பிழையான போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், உள்ளக கட்டுப்பாட்டை தவிர்த்தல் என்பன மோசடிகள் ஏற்பட காரணமாகின்றன.
- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டுடன் வினைத்திறன் தொடர்பில் எவ்வித கருத்தும் தெரிவிக்கும் நோக்கம் இல்லையெனினும்இ சந்தர்ப்பத்திற்குத் தகுந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டுக் கொள்வதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவு பெறப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் ஊடாக நிதிக் கூற்றுக்களது கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் தொடர்புகள் காரணமாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான விதத்திலும் நியாயமான விதத்திலும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வில் அறிந்து கொள்ளப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்பு, பிரதான உள்ளக கடட்டுப்பாட்டில் உள்ள குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியொகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டார்.

## 2. பிற சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(இ)ஆம் பந்தியின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடங்களுடன் இணங்குகிறது என்பது,

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி ஆய்வு

### 3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

வருடத்தில் திட்டமிடப்பட்டவாறு திறைசேரியினால் கட்டுநிதி வழங்கப்படாமை காரணமாக 05 செலவு விடயங்களுக்கு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்த முடியாமற் போனதுடன் அதற்குரியமாக நூற்றிற்கு 9 தொடக்கம் நூற்றிற்கு 44 வரையான வரம்பிற்குள் சேமிப்பு காணப்பட்டது.

### 3.2 செலவு முகாமைத்துவம்

(அ) மீண்டெழும் செலவு விடயங்கள் 10இற்கான ஏற்பாடுகள் ரூ.40,965,000 காணப்பட்டதுடன், தேறிய ஏற்பாட்டில் ரூ.30,153,386 மீதமாகக் காணப்பட்டதுடன் அந்த மீதியை தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக நூற்றிற்கு 30 தொட்ககம் நூற்றிற்கு 92 வரையான வரம்பில் காணப்பட்டது.

(ஆ) மூலதன செலவு விடயங்கள் 05இற்கான ஏற்பாடுகளின் மொத்தம் ரூ.3,350,000 காணப்பட்டதுடன் தேறிய ஏற்பாட்டில் ரூ.2,136,746 மீதமாகக் காணப்பட்டதுடன் அந்த மீதியானது தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக 43% தொடக்கம் 94% வரையான வரம்பைக் கொண்டிருந்தது.

(இ) ஒரு மீண்டெழும் செலவு விடயத்திற்கான ஏற்பாடுகள் ரூ.50,000 கொண்ட மொத்த ஏற்பாடும் மீதமாகக் காணப்பட்டது.

### 3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்பாடுகள்

2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 3ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உறுதிப்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தாலும், அதனடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

திணைக்கத்தின் நிதி நிருவாகம் தொடர்பி வினைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வரப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அந்தக் கட்டமைப்புத் தொடர்பில் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதனடிப்படையில் கட்டமைப்பை வினைத்திறனான வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்றும், அந்த மீளாய்வுகளை எழுத்து மூலமாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்ப வேண்டியிருப்பினும், மீளாய்வு வருடத்தில் ஜூன் மாதத்தின் பின்னர் அத்தகைய மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்காமை

இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 104 (4) பிரகாரம்,நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கையானது நட்டங்கள் ஏற்பட்ட திகதி தொடக்கம் 3 மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டியிருப்பினும் 2024 மே 06ஆந் திகதி திணைக்களத்தின் வாகனம் தொடர்பில் இடம்பெற்றிருந்த விபத்திற்குரிய அறிக்கை 2025 ஏப்பிரல் மாத் 22ஆந் திகதியளவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை.

# 4. செயற்பாட்டு ஆய்வு

## 4.1செயலாற்றுகை

### 41.1 திட்டமிடல்

2020 ஒகஸ்ட் 2ஆந் திகதிய 02/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய எதிர்வரும் வருடங்களுக்கான செயற்றிட்டங்கள், நடப்பு ஆண்டின் டிசம்பர் 15ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும் எனினும், 2024ஆம் ஆண்டிற்குரிய செயற்றிட்டத்திற்குரிய அனுமதியானது 2024 பெப்ரவரி 02ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.1.2 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

2017 ஆம் ஆண்டில் நிருமாணிக்கப்பட்டு நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட மருதமடு திருத்தலத்தின் யாத்திரை இல்லத்திற்கு மீளாய்வு ஆண்டிலும் ரூ.7.15 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டதெனினும், கருத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

## 4.2 சொத்து முகாமைத்துவம்

அ. 2017ஆம் ஆண்டு ஜுன் 28ஆந் திகதிய 01/2017ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07ஆம் பந்திக்கமைய 2024ஆம் ஆண்டிற்கான சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

ஆ. 2006ஆம் ஆண்டில் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட தலைவில் சுற்றுலா வீடு அமைந்துள்ள காணியின் உரிமையை திணைக்களத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4.3 முகாமைத்துவ குறைபாடுகள்

அ. மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறிவிடப்படவேண்டிய ரூ.244,190 தொகை கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆ. 2018 ஜனவரி 24ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 6.5ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல், திறன் விருத்தி திட்ட அபிவிருத்தி, இயலளவு விருத்தித் திட்டங்கள் என்பன தொடர்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு ஒரு சிரேஷ்ட உத்தியோகத்தர் நியமிக்கப்படாமை.

இ. முறைக்கல்வி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகள், சீருடைகள் போன்ற நன்மைகளை வழங்கும்போது பதிவு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டாலும், தற்போதுள்ள கத்தோலிக்க, கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் சமய தலங்களை பதிவு செய்வதற்கு முறையான திட்டமொன்று இல்லையென்றும் அதற்குரிய தேவாலயங்கள் மற்றும் சமயத் தலங்களைப் பதிவு செய்வதற்கு வரைவு செய்யப்பட்டுள்ள சட்டத்தினை அனுமதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஈ. திணைக்கள வாகனமொன்றிற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பில் ஏற்பட்ட ரூ.137,707 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

5. நல்லாட்சி

5.1 பொதுமக்களுக்கு சேவையாற்றுதல்.

2016/12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10ஆம் பந்தியின் பிரகாரம் வருடத்திற்கு இரண்டு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை இலங்கை தகவல்அறியும் உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவிற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனினும் 2024ஆம் ஆண்டிற்குரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

5.2 உள்ளகக் கணக்காய்வு

நி.பி.134(2) மற்றும் 2019 ஜனவரி 12ஆந் திகதிய இலக்கம் DMA/01/2019Mk இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 6ஆம் பந்திக்கமைய உள்ளக கணக்காய்வுத் திட்டமானது கணக்காய்வாளர் தலைமையதிபதியை விசாரித்து தயாரிக்கப்படவேண்டும் எனினும், மீளாய்வு ஆண்டில் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயாரிக்கும்போது அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

6. மனித வள முகாமைத்துவம்

6.1 இணைக்கப்பட்ட ஆளணி மற்றும் உண்மையான ஆளணி

அ. மீளாய்வு ஆண்டில் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 59 மற்றும் உண்மையான ஆளணி 53ஆகும். சிரேஷ்ட மட்ட உதவிப் பணிப்பாளர் பதவியொன்றும், இரண்டாம் நிலை பதவிகள் 04கும் ஆரம்ப தரப் பதவிகள் 01 என 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

ஆ. 2001 ஒகஸ்ட் 22ஆந் திகதிய 18/2001ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றும் ஒரு உத்தியோகத்தருக்கு இன்னுமொரு சேவை நிலையத்தில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்படவேண்டும் எனினும், 2024 டிசம்பர் 31ஆந் திகதியில் 5– 19 வருடங்கள் வரையான காலப்பகுதியைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் 34 பேருக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆர்.எஸ்.கட்டுகம்பல

சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி

பதில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குப் பதிலாக.

## அத்தியாயம் 04
## செயற்றிறன் குறிகாட்டி – நிறுவனத்தின் செயற்றிறன் குறிகாட்டி (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

| முக்கிய பொறுப்புக்கள் | திட்டமிடப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகள் | முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயற்றிறன் குறிகாட்டி | முதிப்பீடு செய்யப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட வருடாந்த செலவு ரூ.மில். (பொருந்துமெனின் மட்டும்) | முன்னேற்றம் | | விதிவிலக்குகள் இருப்பின் அதற்குக் காரணம |
|---|---|---|---|---|---|---|
| | | | | பௌதீக (அளவுரீதியான %) | நிதி % | |
| 1508(17) | நிதித் தேவைப்பாடுகளின்போது ஆலயங்கள் மற்றும் ஏனைய மத அமைப்புக்களுக்கு உதவுதல்.<br><br>ஆன்மீக ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமய சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல். | சமய சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள்<br><br>குடும்ப சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள்<br><br>இளைஞர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் , போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 2 | 100% | 89% | டிசம்பர் மாதத்திற்கான சிட்டைகளுக்கு கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. |
| 1508(18) | பாஸ்கா விழா நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல். | பசம் மூன்றாவது பகுதியை வெளியிடுதல். | 3.5 | 100% | 100% | |
| | தேசிய நத்தார் நிகழ்ச்சிகள் | சமயங்களுக்கிடையிலான நத்தார் நிகழ்ச்சித்திட்டங்கள் / நத்தார் தபால் முத்திரை சித்திரப் போட்டிகள் நடாத்துதல். | 1 | 100% | 100% | |
| | ஏனைய தேசிய மற்றும் சமய சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் நானாவித செயற்பாடுகள். | தேசிய சுதந்திர தின நிகழ்வுகள்<br><br>வேசாக் நிகழ்ச்சிகள் | 0.5 | 100% | 100% | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2-1409 | கிறிஸ்தவ கலை இலக்கியங்கள் | பசம் சர்வதேச மரபுரிமையாகப் பிரகடனப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 0.5 | 95% | 63% | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. |
| | வழிபாடுகள், கிறிஸ்தவ கலைப்படைப்புக்கள் மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் தர்மபிரபாஷ்வர விருது வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் | கிறிஸ்தவ சமய இலக்கிய மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்<br>தர்மபிரபாஷ்வர விருது வழங்கல் நிகழ்ச்சிகள்<br>கலாச்சார நிகழ்ச்சிகள்<br>வழிபாடுகள் | 2.5 | 100% | 100% | |
| | கிறிஸ்தவ மறை தொடர்பான வெளியீடுகளை கொள்வனவு செய்தல் மற்றும் மறைக்கல்வி பாடசாலை நூலக நிகழ்ச்சித்திட்டங்கள் | குிறிஸ்தவ மறை தொடர்பான வெளியீடுகளை கொள்வனவு செய்தல் மற்றும் மறைக்கல்விப் பாடசாலை நூலக நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.5 | 80% | - | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. |
| 04-1508 | யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட திருத்தலங்களது விழாக்களை நடாத்துதல். | 25 திருத்தலங்களது விழாக்களுக்கான பங்களிப்பை வழங்குதல். | 8 | 100% | 88% | கச்சதீவு திருவிழாவிங்காக கடற்படையினரால் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததால் திணைக்கள ஏற்பாடுகள் அவசியப்படவில்லை மற்றும் டிசம்பர் மாத சிட்டைகளுக்கு கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. |
| 05-1508 | சமயக் கல்வி மற்றும் மறைக்கல்வி செயற்பாடுகள் | விவிலிய வினாவிடைப் போட்டிகள் மற்றும் கட்டுரைப் போட்டிகள் | 8 | 98% | 92% | பொதுவான சேமிப்பு |
| | | சமய மற்றும் மறைக்கல்வி செயற்பாடுகள் | 2 | 100% | 60% | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. |
| | | கத்தோலிக்க மறைக்கல்விப் பாடசாலைகளுக்கான சான்றிதழ் பரீட்சை மற்றும் மறையாசிரியர்களுக்கான பரீட்சைகள் | 28 | - | 8% | தே.வ.சு.இலக்கம் 01/2023 இற்கமைய அரச செலவுக் கட்டுப்பாடு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் மறைக்கல்வி இறுதிப் பரீட்சை மற்றும் மறையாசிரியர் பரீட்சைக்கான ஏற்பாடுகள் அவசியமற்றது என அறிவிக்கப்பட்டமை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17-1501 | மறையாசிரியர்களுக்கு வசதிகளை வழங்குதல். | மறையாசிரியர்களுக்கான நூலக கொடுப்பனவுகள் | 82 | 100% | 95% | சாதாரண சேமிப்பு |
| 11-2205 | யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட திருத்தலங்களுக்கு வருகை தருகின்ற யாத்திரிகர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்துதல். | 03 திருத்தலங்களுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்குதல். | 7.15 | 100% | 96% | சாதாரண சேமிப்பு |
| 14-2205 | தொல்பொருளியல் பெறுமதிவாய்ந்த சமயத் தலங்களை அபிவிருத்தி செய்தல். | 03 திருத்தலங்களுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்குதல். | 3 | 100% | 96% | சாதாரண சேமிப்பு |
| 18-2205 | கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல். | 08 கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் | 10 | 100% | 91% | டிசம்பர் மாதத்திற்கான சிட்டைகளுக்கு கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. |

# அத்தியாயம் - 05
# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (GDP) அடைந்துகொள்வதற்கான செயற்றிறன்களுக்காக அடையாளங்காணப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக

| இலக்கு / நோக்கு | | இலக்கு | வெற்றி இலக்குகளுக்கான குறிகாட்டிகள் | இதுவரை வெற்றி இலக்குகளை அடைந்து கொண்டதன் முன்னேற்றம்.<br>0%-49%<br>50%-74%<br>75% - 100% |
|---|---|---|---|---|
| 1508(17) | ஆன்மீக ஆளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமய சகவாழ்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல். | நோயற்ற வாழ்வை உறுதிப்படுத்தி அனைத்து வயதினரதும் நலனோம்பல் செயற்பாடுகளை மேம்படுத்துதல். | பாதிப்பை ஏற்படுத்தும் போதைப்பொருள் பாவனை மற்றும் ஆபத்தான ஔடதங்களது பாவனையைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் மற்றும் அதற்கான வழிமுறைகளை வலுப்படுத்துதல்.<br><br>புகையிலை பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உலக சுகாதார அமைப்பின் நிகழ்ச்சித்திட்டங்களை அனைத்து நாடுகளுக்கும் ஏற்றவகையில் வலுப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல். | 75%-100% |
| 1508(18) | தேசிய நத்தார் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல். நத்தார் தபால் சித்திரப் போட்டிகளை நடாத்துதல். | "இயேசுவின் பிறப்பு" கொண்டுவரும் அமைதியின் செய்தியை தேசிய விழாவொன்றின் ஊடாக சமூகமயப்படுத்துதல | அமைதியானதொரு சமுதாயத்தை நோக்கி கிறிஸ்தவர்களை வழிப்படுத்துதல். | 75% - 100% |
| | ஏனைய தேசிய மற்றும் சமய நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் | ஒவ்வொரு கிறிஸ்வனதும் ஆன்மீக வாழ்வை வலுப்படுத்துதல். | அமைதியானதொரு சமுதாயத்தை நோக்கி கிறிஸ்தவர்களை வழிப்படுத்துதல். | 75% - 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| 02-1409 | கிறிஸ்தவ சமய இலக்கிய மேம்படுத்தல் கருத்திட்டங்கள் | எழுத்து, நாடகங்கள் வாயிலாக ஆளுமையை விருத்தி செய்தல். | கிறிஸ்தவ கலை இலக்கியங்களை உயர்ந்த மட்டத்தில் கொண்டு செல்வதற்கும் அது தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்களையும் பாராட்டுதல். அடுத்த தலைமுறைக்கு சிறந்த கலைஞர்களை உருவாக்குதல். | 75% - 100% |
| | கிறிஸ்தவ மறை தொடர்பான வெளியீடுகளை கொள்வனவு செய்தல் மற்றும் மறைக்கல்விப் பாடசாலைகளது நூலக நிகழ்ச்சித்திட்டங்கள். | முழுமையான, நியாயமான, தரமான கல்வியொன்றை உறுதிசெய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குதல். | 2030ஆம் ஆண்டளவில் கல்வி கற்கும் அனைவரும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அறிவு மற்றும் திறன்களைப் பெற்றிருத்தல், அதற்கு நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான கல்வி மற்றும் நிலைபேறான வாழ்க்கை முறைகள், மனித உரிமைகள், அமைதி மற்றும் வன்முறையற்ற கலாச்சாரமொன்றை மேம்படுத்துதல், பூகோளரீதியான குடியுரிமை மற்றும் கலாச்சார பல்வகைமையை மதித்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு கலாச்சார ரீதியில் பங்களிப்புச் செய்தல். | 75%-100% |
| | வழிபாடுகள், கிறிஸ்தவ கலை இலக்கியங்கள் மற்றும் கலாச்சார செயற்பாடுகள் கிறிஸ்தவ பாடல் நிகழ்ச்சிகளை நடாத்துதல், தர்ம பிரபாஷ்வர கிறிஸ்தவ பாராட்டு விருது வழங்கும் விழா மற்றும் காலா பூஷணம் விருது வழங்கும் விழாவுக்கான பங்களிப்பை வழங்குதல், பல்வேறு கலை மற்றும் இலக்கிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்குதல். | முழுமையான, நியாயமான, தரமான கல்வியொன்றை உறுதிசெய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குதல். | 2030ஆம் ஆண்டளவில் கல்வி கற்கும் அனைவரும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அறிவு மற்றும் திறன்களை பெற்றிருத்தல், அதற்கு நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான கல்வி மற்றும் நிலைபேறான வாழ்க்கை முறைகள், மனித உரிமைகள், அமைதி மற்றும் வன்முறையற்ற கலாச்சாரமொன்றை மேம்படுத்துதல், பூகோளரீதியான குடியுரிமை மற்றும் கலாச்சார பல்வகைமையை மதித்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு கலாச்சார ரீதியில் பங்களிப்புச் செய்தல். | 75%-100% |

| | | | | |
|---|---|---|---|---|
| 04-1508 | யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட திருத்தலங்களது விழாக்களை நடாத்துதல். | நகர மற்றும் குடியிருப்புகளை முழுமையாக, பாதுகாப்பாக, வலுவாக, நிலைபேறான விதத்தில் தயாரித்தல். | உலகின் இயற்கையான மற்றும் கலாச்சார மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் கட்டுக்காப்பு தொடர்பிலான முயங்சிகளை வலுப்படுத்துதல். | 75% - 100% |
| 05-1508 | சமயக் கல்வி மற்றும் மறைக்கல்வி செயற்பாடுகள் | முழுமையான, நியாயமான, தரமான கல்வியொன்றை உறுதிசெய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குதல். | 2030ஆம் ஆண்டளவில் கல்வி கற்கும் அனைவரும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அறிவு மற்றும் திறன்களை பெற்றிருத்தல், அதற்கு நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான கல்வி மற்றும் நிலைபேறான வாழ்க்கை முறைகள், மனித உரிமைகள், அமைதி மற்றும் வன்முறையற்ற கலாச்சாரமொன்றை மேம்படுத்துதல், பூகோளரீதியான குடியுரிமை மற்றும் கலாச்சார பல்வகைமையை மதித்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு கலாச்சார ரீதியில் பங்களிப்புச் செய்தல். | 75% - 100% |
| 17-1501 | மறையாசிரியர்களுக்கு வசதிகளை வழங்குதல். | முழுமையான, நியாயமான, தரமான கல்வியொன்றை உறுதிசெய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குதல். | 2030ஆம் ஆண்டளவில் கல்வி கற்கும் அனைவரும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அறிவு மற்றும் திறன்களை பெற்றிருத்தல், அதற்கு நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான கல்வி மற்றும் நிலைபேறான வாழ்க்கை முறைகள், மனித உரிமைகள், அமைதி மற்றும் வன்முறையற்ற கலாச்சாரமொன்றை மேம்படுத்துதல், பூகோளரீதியான குடியுரிமை மற்றும் கலாச்சார பல்வகைமையை மதித்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு கலாச்சார ரீதியில் பங்களிப்புச் செய்தல். | 75% - 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| 11-2205 | யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட திருத்தலங்களுக்கு வருகை தருகின்ற யாத்திரிகர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்துதல். | நகர மற்றும் குடியிருப்புகளை முழுமையாக, பாதுகாப்பாக, வலுவாக, நிலைபேறான விதத்தில் தயாரித்தல். | உலகின் இயற்கையான மற்றும் கலாச்சார மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் கட்டுக்காப்பு தொடர்பிலான முயற்சிகளை வலுப்படுத்துதல். | 75% - 100% |
| 14-2205 | தொல்பொருளியல் பெறுமதிவாய்ந்த சமயத் தலங்களை அபிவிருத்தி செய்தல். | | தொல்பொருளியல் பெறுமதிவாய்ந்த சமயத் தலங்கள் மற்றும் தேவாலயங்கள் போன்ற கிறிஸ்தவ புராதன மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினர்பொருட்டு பேணிப் பாதுகாத்தல். | 75% - 100% |
| 18-2205 | தேவாலயத்தின் நிருமாணப்பணிகள், புனரமைப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். | நகர மற்றும் குடியிருப்புகளை முழுமையாக, பாதுகாப்பாக, வலுவாக, நிலைபேறான விதத்தில் தயாரித்தல். | உலகின் இயற்கையான மற்றும் கலாச்சார மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் கட்டுக்காப்பு தொடர்பிலான முயங்சிகளை வலுப்படுத்துதல். | 75% - 100% |

திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பல செயற்பாடுகள் எண்ணிக்கை ரீதியில் அளவிடக்கூடியவையாகக் காணப்படாமையினால், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளங்காணுதல் கடினமாகும். எனினும், இத்திணைக்களத்தினால், திணைக்களத்தின் நோக்கு மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் அடையாளங்காணப்பட்ட நிலைபேறான இலக்குகளை அடைந்து கொள்ள முடிந்தது. அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஏற்ற வகையில் நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்பெறாமையால், ஒழுங்கு செய்யப்பட்ட சில நிகழ்ச்சிகளுக்கு திணைக்களத்தினாலேயே நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இயலுமானவரையில் இலக்குவைக்கப்பட்ட செயற்பாடுகளை அடைந்து கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டன.

# அத்தியாயம் 06

# மனிதவள விபரத்திரட்டு

## 6.1. ஆளனி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளனி எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளனி எண்ணிக்கை | வெற்றிடம் / (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 03 | 02 | 01 |
| மூன்றாம்நிலை | 01 | 01 | 00 |
| இரண்டாம்நிலை | 50 | 46 | 04 |
| ஆரம்பம் | 06 | 04 | 02 |

## 6.2. ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

திணைக்களத்தின் பணிப்பானர், உதவிப் பணப்பாளர், கணக்காளர் ஆகிய 03 பதவிகளுள் உதவிப் பணிப்பாளர் பதவி மட்டும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அற்ற பிரதேசங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள், போட்டிகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் என்பன திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தபட்டு செயற்படுத்தப்படுகின்றது. அதனடிப்படையில், தற்போதுள்ள மனிதவளங்களை ஊக்கப்படுத்தி உச்ச அளவில் பயனைப் பெற்றுக் கொள்வதற்கும் அதனடிப்படையில் உயர் செயற்றிறனைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 6.3. மனிதவள அபிவிருத்தி

| தொடர் இலக்கம் | உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்ட திகதி | பயிற்சித் திட்டங்கள் | கொடுப்பனவு செய்பவரது பெயர் | செலவு (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 12.'.20.'.2024 | திணைக்கள ஊழியர்கள் 10 பேருக்கு SDFLநிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்ட பயிற்சித்திட்டங்கள் | திறன் அபிவிருத்தி நிதியம் | 70,000.00 |
| 2 | 14.'.03.'.2024 | திணைக்கள ஊழியர்கள் 02 பேருக்கு SDFLநிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்ட பயிற்சித்திட்டங்கள் | திறன் அபிவிருத்தி நிதியம் | 42,000.00 |

## அத்தியாயம் 07

## இணக்கப்பாட்டு அறிக்கை

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதன் சுருக்க விபரம் | எதிர்காலத்தில் இணக்கமடையாமையினை தவிர்ப்பதற்கு முன்மொழியப்படும் சரியான தீர்வுகளுக்குரிய நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **1.** | பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | | | |
| 1.1. | வருடாந்த நிதியறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2. | அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணுக்கு | இணக்கமானது | | |
| 1.3. | வியாபார மற்றும் உற்பத்திக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு) | இணக்கமற்றது | | |
| 1.4. | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணக்கமற்றது | | |
| 1.5. | விஷேட முற்பணக் கணக்கு | இணக்கமற்றது | | |
| 1.6. | ஏனையவை | இணக்கமற்றது | | |
| **2.** | புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445) | | | |
| 2.1. | அரச கணக்குகள் சுற்றறிக்கை267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2. | ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு / தனிநபர் சம்பள பதிவேடுகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3. | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5. | அனைத்து மாதாந்த கணக்குப் பொழிப்புகளையும் (CIGAS)தயார் செய்து திறைச்சேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 2.6. | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7. | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.8. | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்க மானது | | |
| 2.9. | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்க மானது | | |
| 2.10. | பொறுப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்க மானது | | |
| 2.11. | அடிக்கட்டைப் புத்தகங்களின் (GAN20)பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்க மானது | | |
| 3. | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன (நி.பி.135) | | | |
| 3.1. | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்படுகின்றமை | இணக்க மானது | | |
| 3.2. | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்படுகின்றமை தொடர்பாக நிறுவனத்திற்குள் அறிவுறுத்தல் | இணக்க மானது | | |
| 3.3. | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுதல். | இணக்க மானது | | |
| 3.4. | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின்படி அரச சம்பள மென்பொருளைப் பயன்படுத்தம் போது கணக்காளரது கட்டுப்பாட்டின் கீழ் செயற்பாடுகளை முன்னெடுத்தல். | இணக்க மானது | | |
| 4. | வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல் | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தனைத் தயாரித்தல் | இணக்க மானது | | |
| 4.2 | வருடாந்த கேள்வி நடைமுறைத் திட்டத்தனைத் தயாரித்தல் | இணக்க மானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தனைத் தயாரித்தல் | இணக்க மானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (டேனு) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்க மானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்க மானது | | |
| 5. | கணக்காய்வு வினாக்கள் | | | |
| 5.1. | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி .பி.134 (2) DMA/1-2019படி,ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்க மானது | | |
| 6.2 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 6.3 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு நகல்களும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 6.4 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களும் (3)134 நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| **7.** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA1-2019 சுற்றறிக்கையின்படி ஆண்டுக்குக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 8. | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதனமுகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017 உடையசொத்து முகாமைத்துவம் சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்தின்படி சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்க மானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படிசுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும்அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்க மானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படிஇ பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டுதொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியானஇ குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 8.5 | நி.பி 772 இன்படிகழிக்கப்பட்டபொருட்களைஅகற்றுதல்இடம் பெற்றிருத்தல் | இணக்க மானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | **வாகனமுகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்க மானது | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணக்க மானது | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல்வேண்டும் | இணக்க மானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்க மானது | | |
| 9.5 | 2016.12.29திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்க மானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் குத்தகைக் காலத்தின் பின்னர், முழு குத்தகை உரித்து மாற்றப்பட்டிருத்தல். | இணக்க மானது | . | |
| 10 | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க கூற்றினைத் தயாரித்து சான்றுப்படுத்தி அவை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் இருந்து முன்கொணரப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளினால் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் இணக்கமாக்கப்பட வேண்டிய மீதி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த நிலுவைகள் ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணக்க மானது | | |
| 11.2 | நி.பி .94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாதபொறுப்புக்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் வருட இறுதியில் மிகுதி ஒதுக்கீட்டு வரம்பை மீறாதவாறு பொறுப்புகளை பேணல் | இணக்க மானது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்க மானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல். | இணக்க மானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் நிலுவைகள் தீர்க்கப்பட்டிருத்தல். | இணக்க மானது | | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்க மானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்க மானது | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 14.2 | நி.பி.371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல்இ அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 14.3 | நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்க மானது | | |
| **15** | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இணக்க மானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம்வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்க மானது | | |
| 15.3 | நி.பி176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | இணக்க மானது | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்க மானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைப்பட்டியல்களை வழங்கப்பட்டிருத்தல் | இணக்க மானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்க மானது | | |
| **17** | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல் | இணக்க மானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை பிரசுரிப்பதற்கு வசதிகளை வழங்குதல் | இணக்க மானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்க மானது | | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்க மானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரைஇ பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்க மானது | | |
| **19** | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல . 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்க மானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்க மானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்க மானது | | |
| 19.4 | மேற்கண்டசுற்றறிக்கையின்6.5 வதுபந்திக்குஏற்பமனிதவளமேம்பாட்டுத்திட்டம்,திறன் மேம்பாட்டுத்திட்டங்கள்மற்றும்திறன்மேம்பாட்டுத்திட்டங்களைசெயற்படுத்தல்ஆகியவற்றின்பொறுப்பில்ஒருசிரேஷ்ட உத்தியோகத்தரை நியமித்தல். | இணக்க மானது | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்க மானது | | |